# DEPOSITION OF WITNESS

## Chapter XXIII Code of Criminal Procedure

## IN THE COURT OF SESSIONS JUDGE

## TIRUVARUR

### Sessions Case No.129/2025

**Deposition of Witness for Prosecution PW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தமிழ்செல்வி | Father's Name | : | கலியமூர்த்தி |
| Village | : | மருதமாணிக்கம் | Taluk | : | குடவாசல் |
| Calling | : | | Age | : | 40 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 02nd day of February 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது மருதமாணிக்கத்தில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருக்கிறேன். நான் ஒரு மாற்று திறனாளி, உயரம் மிக குறைவு. ஆஜர் எதிரியை தெரியும். அவர் என் பக்கத்து வீட்டில் வசித்து வருகிறார். என் வீட்டு சாமியறை பக்கத்தில் எதிரி வீட்டு கருவரை மரம் இருந்தது, அதை வெட்ட சொன்னதற்கு அவர் வெட்ட மாட்டேன் என சொல்லிவிட்டார். நாங்கள் கிராமத்தில் சொன்னோம், எங்களுக்குள் சண்டையாகிவிட்டது. அவர் எங்கள் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.02 14:16:47 +0530

உடைத்து விட்டார். நாங்கள் கிராமத்தில் சொல்லியதில் எங்கள் வீட்டில் உடைந்த கண்ணாடிகளை அவர் திரும்ப போட்டு கொடுத்து விட்டார். கடந்த 08.05.2025 ம் தேதி இரவு 7.30 மணியளவில் நானும் என் அக்கா மகள் தமிழரசியும் வீட்டிலிருந்தபோது அவர் எங்கள் மீது சுடச்சுட சாதம் வடித்த கஞ்சி தண்ணியை ஊற்றி விட்டார். அவர் எங்களிடம் துணியை தூக்கி காட்டினார். இது சம்மந்தமாக குடவாசல் காவல் நிலையத்தில் எழுத்து பூர்வமான புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அந்த புகார் **அ.சா.ஆ.1**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

08.05.2025 ம் தேதி இரவு 7.30 மணியளவில் சம்பவம் நடந்ததாக நான் புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரி. ஆனால், 10.05.2025 ம் தேதி காலை 10.30 மணிக்கு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரி. நான் 3 நாட்கள் கழித்துதான் புகார் கொடுத்தேன் என்ற விபரத்தை புகாரில் சொல்லவில்லை என்றால் சரி. புகாரில் சொல்லியுள்ளதுபோல் எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை என்பதால்தான் 3 நாட்கள் கழித்து புகார் கொடுத்துள்ளேன் என்றால் தவறு. எதிரி எங்கள் மீது சாதம் வடித்த சுடு தண்ணியை ஊற்றிவிட்டதாக சொல்லிய சூழ்நிலையில் அதற்காக எந்த மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டோம் என்ற விபரத்தை புகாரிலும்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.02 14:16:55 +0530

போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரி. அ.சா.ஆ.1ல் சொல்லியுள்ளதுபோல் எதிரி சுடு தண்ணி எதையும் எங்கள் மீது ஊற்றவில்லை என்பதால்தான் நாங்கள் மருத்துவமனை சென்று சிகிச்சை எடுத்துக் கொள்ளவில்லை என்றால் தவறு. புகார் கொடுத்ததற்கு மறுநாள் போலீசார் வீட்டில் வந்து என்னை விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரித்தபோது புகாரில் சாதம் வடித்த சுடு கஞ்சியை ஊற்றியதாக சொன்ன சங்கதியை போலீசார் என்னை மறுபடி விசாரித்தபோது அதுபோன்று எதுவும் நடக்கவில்லை என மாற்றி சொல்லியுள்ளேனா என்றால் அதுபோல் எதுவும் சொல்லவில்லை. போலீசார் என்னை விசாரித்தபோது காவல் நிலையத்தில் 2 முறை வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார்கள். துர்காதேவி என் உடன்பிறந்த அக்கா. துர்காதேவிக்கும் ஆஜர் எதிரிக்கும் இடப் பிரச்சனை உள்ளது என்றால் சரி. எதிரியின் இடத்தில் என் அக்கா வீடு கட்டியுள்ளதாக ஏற்கனவே புகார் உள்ளது என்றால் ஆமாம். இது சம்மந்தமாக வட்டாட்சியர், குடவாசல் போலீசார் விசாரித்து நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்றால் சரி. என் அக்கா வீட்டிற்கும் எதிரிக்கும் ஏற்கனவே உள்ள இட பிரச்சனையை பயன்படுத்தி நடக்காத சம்பவத்தை நடந்ததாக சொல்லி ஆஜர் எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் தவறு. அதனால்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.02 14:17:02 +0530

தான் 8 ம் தேதி நடந்த சம்பவத்திற்கு 10 ம் தேதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் தவறு. எதிரி எங்கள் முன் அவர் அணிந்திருந்த துணியை தூக்கி காட்டியதாக கூறுவது வழக்கை மிகைப்படுத்துவதற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. அ.சா.ஆ.1ல் சொல்லியுள்ளதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை எனவும் வழக்கிற்கும் ஆஜர் எதிரிக்கும் எந்த தொடர்புமில்லை என்றால் தவறு. எங்கள் வீட்டிலிருந்து குடவாசல் காவல் நிலையம் சுமார் 10 கி.மீ. தொலைவு இருக்கும். இருசக்கர வாகனத்தில் சென்றால் ½ மணி நேரத்தில் சென்றுவிடலாம் என்றால் சரி. எனது வீட்டில் 2 பைக்குகள் உள்ளன. நான் சொல்வதுபோல் அன்றைய தினம் சம்பவம் நடந்திருந்தால் ½ மணி நேரத்தில் சென்று புகார் கொடுத்திருக்கலாம் எனவும் சம்பவம் எதுவும் நடைபெறாததால்தான் 3 நாட்கள் கழித்து புகார் கொடுத்துள்ளேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.02 14:17:08 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.129/2025**

**Deposition of Witness for Prosecution PW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தமிழரசி | Husband's Name | : | ராஜேஷ்வரன் |
| Village | : | செருகளத்தூர் | Taluk | : | குடவாசல் |
| Calling | : | | Age | : | 28 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 02nd day of February 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது செருகளத்தூரில் வசித்து வருகிறேன். அ.சா.1 என் சித்தி. நாங்கள் அனைவரும் கூட்டு குடும்பமாக வசித்து வருகிறேன். ஆஜர் எதிரி எங்கள் வீட்டிற்கு பக்கத்து வீட்டில் வசித்து வருகிறார். எங்கள் வீட்டிற்கும் எதிரியின் வீட்டிற்குமிடையே ஒரு கருவை மரம் இருந்தது. அது எங்கள் வீட்டு சாமியறை பக்கம் வந்தது, அதை வெட்ட சொன்னோம், அவர் வெட்டவில்லை. பின்னர் கிராம முக்கியஸ்தரிடம் சொல்லி கிராம முக்கியஸ்தர்கள் அவரிடம் சொன்னதால் அந்த மரத்தை

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.02 14:17:17 +0530

வெட்டினார். அதை மனதில் வைத்துக்கொண்டு எங்கள் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை எதிரி அடித்து உடைத்துவிட்டார். இது சம்மந்தமாக நாங்கள் மறுபடியும் கிராம முக்கியஸ்தர்களிடம் சொன்னதில் எதிரி கிராமத்தில் குற்றத்தை ஒப்புக் கொண்டார். எங்கள் வீட்டில் உடைத்த கண்ணாடியை சுமார் ரூ.5,000/- செலவு செய்து சரி செய்து கொடுத்தார். அது முதல் எங்களுக்கும் அவருக்கும் முன்விரோதம் இருந்து வந்தது. கடந்த 08.05.2025 ம் தேதி இரவு 7.30 மணியளவில் நானும் என் சித்தி தமிழ்செல்வியும் சாமி ரூமில் இருந்தபோது எதிரி எங்கள் இருவர் மீதும் சாதம் வடித்த சுடு தண்ணியை ஊற்றினார். நாங்கள் நின்று கொண்டிருக்கும்போதே எதிரி கைலியை தூக்கி காண்பித்து கெட்ட வார்த்தைகள் சொல்லி பேசினார், இதுபோல் அவர் அடிக்கடி செய்வார். இது சம்மந்தமாக குடவாசல் காவல் நிலையத்தில் என் சித்தி தமிழ்செல்வி புகார் கொடுத்தார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் 08.05.2025 ம் தேதி நடந்தது, 2 நாட்கள் கழித்து காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். கொதிக்கும் சுடுதண்ணியை எங்கள் மீது ஊற்றியதற்கு நாங்கள் எந்த மருத்துவமனை சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டோம் என்றால் எந்த

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.02 14:17:23 +0530

மருத்துவமனையும் செல்லவில்லை. எங்கள் வீட்டிலிருந்து குடவாசல் காவல் நிலையம் சுமார் 5 கி.மீ. தொலைவு இருக்கும். எங்கள் வீட்டிலிருந்து இருசக்கர வாகனத்தில் குடவாசல் காவல் நிலையத்திற்கு ½ மணி நேரத்தில் சென்று விடலாம். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெற்றிருந்தால் ½ மணி நேரத்தில் குடவாசல் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்திருக்கலாம் எனவும் நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் எந்த சம்பவமும் நடைபெறாததால்தான் அன்றைய தினமே புகார் கொடுக்கவில்லை என்றால் தவறு. எந்த தேதி, மாதத்தில் எங்கள் வீட்டு கண்ணாடியை எதிரி உடைத்தார் என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி. போலீசார் என்னை முதலில் விசாரித்தபோது எதிரி எங்கள் மீது சுடு தண்ணியை ஊற்றினார் எனவும் மறுமுறை போலீசார் என்னை விசாரித்தபோது அதுபோல் எதுவும் நடைபெறவில்லை எனவும் 2 வாக்குமூலங்கள் கொடுத்துள்ளேன் என்றால் அதுபோல் நான் சொல்லவில்லை. எதிரி வாய் பேச முடியாத ஊமை என்றால் அவர் பேசுவார். நாங்கள் நின்று கொண்டிருக்கும்போதே எதிரி கைலியை தூக்கி காண்பித்து கெட்ட வார்த்தைகள் சொல்லி பேசினார் எனவும் இதுபோல் அவர் அடிக்கடி செய்வார் எனவும் நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.02 14:17:28 +0530

மாறானவை எனவும் அவர் வாய் பேச முடியாது ஊமை எனவும் சொன்னால் தவறு. என் அம்மா துர்காதேவிக்கும் ஆஜர் எதிரியின் வீட்டிற்குமிடையே இடப் பிரச்சனை சம்மந்தமாக முன் விரோதம் உள்ளது என்றால் அதுபோல் இல்லை. என் அம்மா துர்காதேவி எதிரிக்கு சொந்தமான இடத்தில் வீடு கட்டியுள்ளார் என்றால் இல்லை. எதிரியின் மனைவி என் அம்மா துர்காதேவி மீது குடவாசல் வட்டாட்சியர், காவல் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியோரிடம் மனு கொடுத்து நாங்கள் வீடு கட்டுவதை நிறுத்திவிட்டார் என்றால் அதுபோல் எதுவும் நடக்கவில்லை. என் அம்மாவிற்கும் ஆஜர் எதிரிக்குமுள்ள முன் விரோதத்தை பயன்படுத்தி என் சித்தி காவல் நிலையத்தில் கொடுத்த பொய்யான புகாரை ஆதரித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. அதனால்தான் 8 ம் தேதி நடந்த சம்பவத்திற்கு 10 ம் தேதி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துள்ளோம் என்றால் எதிரி கைலியை தூக்கி காண்பித்ததை சொல்ல முடியாத காரணத்தால் 2 நாட்கள் கழித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை எனவும் அவர் எங்கள் மீது சுடு தண்ணியை ஊற்றியிருந்தால் கைலியை தூக்கி காண்பித்திருந்தால் அதுபோல்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.02 14:17:33 +0530

நடைபெறாததால்தான் 2 நாட்கள் கழித்து நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோம் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.02 14:17:39 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.129/2025

**Deposition of Witness for Prosecution PW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கலியமூர்த்தி | Father's Name | : | நடேசன் |
| Village | : | மருதமாணிக்கம் | Taluk | : | குடவாசல் |
| Calling | : | | Age | : | 72 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 02nd day of February 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது மருதமாணிக்கத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். அ.சா.1 என் மகள், அ.சா.2 என் பேத்தி. ஆஜர் எதிரி என் பக்கத்து வீட்டுக்கார். எங்கள் வீட்டு ஜன்னல் கண்ணாடியை எதிரி உடைத்து விட்டார். எதிரி என் உறவினர்தான். இது சம்மந்தமாக நான் கிராம பஞ்சாயத்தார்களிடம் தெரிவித்தேன். கிராமத்தாரிடம் எதிரி மன்னிப்பு கேட்டுக் கொண்டார். அந்த கண்ணாடியை நான் சரி செய்து கொண்டேன். அதுமுதல் எங்கள் குடும்பத்தினர் மீது விரோதம் கொண்டிருந்தார்.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.02 14:17:45 +0530

08.05.2025 ம் தேதி இரவு 7.30 மணியளவில் எதிரி என் மகள் மற்றும் என் பேத்தி மீது சுடு கஞ்சியை ஊற்றினார். இது சம்மந்தமாக என் மகள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் சம்மந்தமாக நான் நேரடியாக பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தபோது இந்த விபரத்தை சொன்னேன். எதிரி உடைத்த எங்கள் வீட்டு கண்ணாடியை நான்தான் சரிசெய்து கொண்டேன். இந்த விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். எங்கள் வீட்டிற்கும் ஆஜர் எதிரி வீட்டிற்குமிடையே இட பிரச்சனை உள்ளது. ஆஜர் எதிரிக்கு சொந்தமான இடத்தில் என் மகள் வீடு கட்டியுள்ளது சம்மந்தமாக குடவாசல் வட்டாட்சியர், காவல் நிலையம், கிராம நிர்வாக அலுவலகம் ஆகியவற்றில் மனு கொடுத்து நிலுவையில் உள்ளன என்றால் சரி. என் மகளுக்கு ஆதரவாக எதிரி மீது கொடுக்கப்பட்ட பொய்யான புகாருக்கு ஆதரவாக நான்பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.02 14:17:51 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.129/2025**

**Deposition of Witness for Prosecution PW 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | புஷ்பவள்ளி | Husband's Name | : | கலியமூர்த்தி |
| Village | : | மருதமாணிக்கம் | Taluk | : | குடவாசல் |
| Calling | : | | Age | : | 62 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 02nd day of February 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது மருதமாணிக்கத்தில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருக்கிறேன். அ.சா.1 என் மகள், அ.சா.2 என்பேத்தி, அ.சா.3 என் கணவர். ஆஜர் எதிரி என் பக்கத்து வீட்டுக்காரர். எங்கள் வீட்டு சாமியறையின் ஜன்னல் கண்ணாடியை எதிரி உடைத்து விட்டார். இது சம்மந்தமாக நாங்கள் கிராமத்தில் நியாயம் கேட்டோம். எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டு உடைந்த கண்ணாடிகளை சரிசெய்து கொடுத்தார். 8 ம் தேதி 5 ம் மாதம் 2025 நைட் எதிரி வடிச்ச கஞ்சி தண்ணியை என் மகள்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.02 14:17:57 +0530

மற்றும் பேத்தி மீது ஊற்றிவிட்டார். மறுபடியும் நாங்கள் கிராமத்தில் மனு கொடுத்தோம், கிராமத்தில் கேட்காததால் என் மகள் போலீசில் புகார் கொடுத்தார். ஆய்வாளர் வீட்டிற்கு வந்து என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் சம்மந்தமாக நான் நேரடியாக பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தபோது இந்த விபரத்தை சொன்னேன். எதிரி கண்ணாடியை உடைத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. எங்கள் வீட்டிற்கும் ஆஜர் எதிரி வீட்டிற்குமிடையே இட பிரச்சனை உள்ளது. ஆஜர் எதிரிக்கு சொந்தமான இடத்தில் என் மகள் வீடு கட்டியுள்ளது சம்மந்தமாக குடவாசல் வட்டாட்சியர், காவல் நிலையம், கிராம நிர்வாக அலுவலகம் ஆகியவற்றில் மனு கொடுத்து நிலுவையில் உள்ளன என்றால் சரி. என் மகளுக்கு ஆதரவாக எதிரி மீது கொடுக்கப்பட்ட பொய்யான புகாருக்கு ஆதரவாக நான்பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.02 14:18:03 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.